Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 9/300 of 1953.

இந்து சாதனம்

விரோதி (1889) ஆனி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை போய்கையும் போன்றதே, ஈசனேந்தை யிணையடி நீழலே.

[புத்-எஉ] யாழ்ப்பாணம்:- சார்வரிஞு கார்த்திகைமீ கூ0உ வெள்ளிக்கிழமை (25 November 1960) [இல-கூச]

அரசியல் அலை

பிரதமர் உத்தியோக இல்லத்திற்குப் பெரிய காவல் ஒழுங்கு?

அஞ்சாநெஞ்சம் படைத்த அம்மையாருக்கும் இந்த அணை வேண்டுமா?

தகநாயக ஆட்சியிற் பிரதமர் இல்லம் பெரும் பேச்சாக இருந்தது சுவர்கள் தொடர்ந்து வளர்ந்தன. சுற்றிலும் பாடிகாவலர்தொண்டுசெய்தனர். எல்லாம் இராணுவ கால மயமாயிருந்தது. பின்னர் ஒரு இடைக்காலம்; அந்தப் பாதுகாப்பு மெல்ல நழுவியது. இப்பொழுது அம்மையார் ஆட்சியில் மறுபடியும் பிரதமர் இல்லத்திற் பிரம்மாண்டமான காவல். இது எதைக் குறிக்கின்றது?

சிறிமாவுக்கும் நெஞ்சிடியென்றால் சிறிலங்காக் கட்சி யெடுத்த மக்கள் ஆதரவின் கருத்தென்ன! பாடசாலைகளை எடுப்பது பற்றிய ஆட்சேபனைக் கூட்டங்களைக் கூட்டக் கூடாது என்று தடையுத்தரவு பிறப்பித்தலின் நோக்கமென்ன! ஒலி பெருக்கியும் பயன்படுத்தப் படாத பயப்பாடான நிலைமை வரக் காரணமென்ன!

சுதந்திரக்கட்சி என்பது பெயர். மக்களின் சுதந்திரத்தை எல்லா வழியிலும் அபகரிப்பது செயலாற்றும் முறை. என்ன பொருத்தமான பெயர்.

ஆட்சியாளர் முடிவு செய்தால் அவ்வளவு தான். அதை ஆட்சேபித்துயாரும் பேசக் கூடாதென்பது தான் சுதந்திரக்கட்சியின் கட்சிக்கொள்கை என்பது வெள்ளி டை மலை போல விளங்குவதாயிற்று.

நற் சிந்தனை

பொறியைந்தும் வென்றவர்பாற்
பொருந்துகின்ற தெய்வம்
போக்குவர வில்லாமல்
நிறைகின்ற தெய்வம்
அறிவோன்றை நினைப்பவர்பா
லமர்ந்திருக்கும் தெய்வம்
அம்புவியில் மாமனாய்
வழக்குரைத்த தெய்வம்
குறியொன்று மில்லாமற்
கூத்தாடுந் தெய்வம்
குழந்தைவடி வேலவனைக்
கொண்டாடுந் தெய்வம்
வெறிகமழுஞ் சோலைசூ
ழிலங்கைவாழ் தெய்வம்
விருப்புவெறுப் பில்லாத
தெய்வமிது தானே.

(சிவ தொண்டன்)

ஒரேபாடசாலையிற் பலமதப்பிள்ளைகள்

குழந்தை உள்ளத்தில் நாத்திக வித்திட நல்ல வழி

இன்றைய அரசாங்கத்தின் கல்வித் திட்டத்தின் பயனாக நம் நாட்டின் திலகங்களாகத் திகழ்ந்த மதஸ்தாபன பாடசாலைகளில் அதிகமானவை தத்தம் மதஸ்தாபன சோபையையிழந்து கல்வித் தராதரம் பெற்ற பல இளைஞர்களை உற்பத்தி செய்யும் ஆலைகளாக இயங்க இருக்கின்றன. மத சம்பந்தப்பட்ட படிப்பு அந்த அந்தச் சமய மாணவர்களுக்கு ஒரே பாடசாலையில் ஊட்டப்படுமென நாம் நம்பக் கிடக்கிறது. இம்முறை தோற்றத்தில் நியாயமானதுபோல இருப்பினும் ஒரே பாடசாலையிற் பயிலும் பல மதப் பிள்ளைகளும் விவாத பாட நேரத்தில் கடவுளைப்பற்றி ஆராயுமிடத்து அனுபவம் அதிகமின்மையினால் பிஞ்சு உள்ளத்தில் கடவுள் இல்லை என்ற முடிவுக்கும் வருவார்கள். இந்தச் சூழ்நிலையிற்றான் "மதம் மக்களுக்கு அபின்" என்ற உலகாயத தத்துவ ஞானிகளின் சீடர்கள் தம் தத்துவத்தை விதைக்கக் குழந்தை உள்ளம் பொருத்தமான நிலமென முன்வருவர். இதையுணர்ந்த கத்தோலிக்க புரொட்டஸ்தாந்த கிறிஸ்தவர்களோடு சில புத்த இஸ்லாமிய சமையிகளும் தமக்கெனச் சம்பளம் பெறுதசொந்தப்பாடசாலைகள் வேண்டுமென்று சில பாடசாலைகளைக்காப்பாற்ற முன் வந்திருக்கின்றனர்.

ஆனால் இலங்கைவாழ் சைவசமய மாணவர்களைச் சைவ நெறிப்படி சைவச் சூழலில் வளர்க்கச் சம்பளம் பெறுத ஒரு ஸ்தாபனம் இல்லையே என்று சிந்திக்குமிடத்து மனம் நொறுங்குகிறது. தமிழ் மக்களிடையே பிரிவினை உண்டாக்கித் தம் அரசியற் கட்சியை வளர்க்கும் ஒரே நோக்குள்ள சிலர் மதக் கல்வி செவ்வனே அரசாங்க பாடசாலைகளில் ஊட்டப்படுமெனச் சமாதானம் கூறுகின்றனர்; சமாதானம் இருக்கலாம், ஆனால் அப்பாடசாலைகளில் சைவசமய கலாச்சாரச் சூழல் இருக்கவே முடியாதென நாம் திடமாகக் கூறலாம். இந்நிலையிருப்பதனாற்றான் தனிச் சைவநெறிச் சூழல் உள்ள ஒரு பாடசாலை ஆகிலும் இயங்க வேண்டுமென சைவ அபிமானிகள் சித்தம் கொள்ள வேண்டும்.

தமிழினத்துக்குத் தமிழ்ச் சர்வகலாசாலை வேண்டுமென்னும் கலாநிதிகளும், இந்துக் கலாசார சர்வகலாசாலை வேண்டுமென வாதாடும் தத்துவ ஞானிகளும், தமிழரசு, தமிழ்நாடு தமிழனுக்கு வேண்டுமெனக் கங்கணம்கட்டும் அரசியல் மேதைகளும், வழக்குரைப்போரும் தமிழினத்தின் உயிர் நிலையமாய் விளங்கும் சைவ சமயிகளுக்கெனத் தனித்தியங்கும் ஒரு பாடசாலையை நடத்த நினையாதிருப்பது வருத்தத்துக்குரியதாகும். ஒரு சைவ நெறிப் பாடசாலையை அரசினர் உதவியின்றி நடத்த வழியற்றவர்களா தமிழினத்தை வழிநடத்தக்கூடியவர்களென்பப்படும் தலைவர்கள்? இது தமிழினத்தின் சோதனைகாலமென எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். சைவப் பற்றுள்ள பரோபகார சிந்தை படைத்த பெரியோர்களும், ஆசிரிய ஆசிரியைகளும், அரசியலாரும் இச்சமயத்தில் தங்கடமையைச் செய்து நிலைமையைச் சமாளித்தல் வேண்டும்.

மு. ஜெயரத்தினம், நவாலி

தலைமை ஆசிரியரின் தலைசிறந்த சேவை

பெரியோர் வழியைப் பின்பற்றியதாற் பெற்ற பெரும்பேறு

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் தலைமை ஆசிரிய பதவியை வகித்து, மாணவர்களையும், ஆசிரியர்களையும், சைவச் சமுகத்தையும் மகிழ்விக்கும் முறையிற் சிறந்த தொண்டாற்றி வரும் திரு. ச. அம்பிகைபாகனவர்களைப் பாராட்டும் வெள்ளிவிழா வொன்று சென்ற ஞாயிற்றுக்கிழமை வித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தாரால் வித்தியாலய மண்டபத்தில் மிகச் சிறப்பாகச் செய்யப்பெற்றது.

தமிழும் சைவமும் மறைந்து, சிங்களமும் பௌத்தமும் இங்கே இடம் பெறக்கூடிய அறிகுறிகள் தோன்றுவதால் பாடசாலை மசோதாவிலுள்ள சில சலுகைகளைப் பயன்படுத்திச் சைவத்தையும் தமிழையும் பாதுகாக்கும்பொருட்டு, ஒரு சில பாடசாலைகளை நடத்தச் சைவத் தமிழ் மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத் தலைமைஆசிரியர் திரு. ச. அம்பிகைபாகனவர்கள் மேற்படி கல்லூரித் தலைமையாசிரியராகக் கடமையாற்றியதையொட்டி நடந்த வெள்ளிவிழா வைபவத்தில் பேசும்போது நியாயவாதி திரு. எஸ். ஆர். கனகநாயகமவர்கள் மேற்கண்டவாறு கூறினார்கள்.

அவருக்குப் பின் பேசிய பண்டிதமணி திரு. சி. கணபதிப் பிள்ளையவர்கள், சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முக்கிய அங்கத்தவராய் விளங்கும் திரு. கனகநாயகம் இவ்விஷயத்தில் நடவடிக்கை எடுத்தால் ஒரு சதம்தானும் வேதனமாகப் பெறாமல் நான் படிப்பிப்பேன் என்று உறுதியாய்க் கூறினார்கள்.

"ஆசிரியத்தொழிலை ஒரு புனிதத் தொண்டென்று கருதாது சும்மா தொழிலென்று கருதும் மனப்பான்மை இன்று மிகுந்து காணப்படுகிறது. இதனால் அன்று வணங்காமுடிகளாக விளங்கிய ஆசிரியர்கள் இன்று தாழ்வுநிலைக்கு வந்துவிட்டார்கள். இந்த இழுக்கு நிலை மாறவேண்டுமானால் தம் மொழிக்கும் மதத்துக்கும் உன்னத சேவை செய்கிறோம் என்ற எண்ணம் மீண்டும் அவர்களிடம் ஏற்படவேண்டும் என்று முதலியார் திரு. செ. சின்னத் தம்பியவர்கள் பேசும்போதுகுறிப்பிட்டார்கள்.

ஞாயிற்றுக்கிழமை மாலை அக்கல்லூரிப்பழையமாண

தொடர்ச்சி 6ம் பக்கம்)

செல்வச்சந்நிதியில் விளக்கீடு வழிபாடு

தொண்டமானாறு செல்வச் சந்நிதிப் பெருமான் சந்நிதானத்தில் ஸ்ரீ. சுப்பிரமணியப் பெருமானுக்கு, கார்த்திகை 17-ந் திகதி (2-12-60) வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் கார்த்திகைத்தீபமும், ஊஞ்சலும், படிப்பும் நடைபெறும். அடுத்து நாலுசாமப் பூசை விசேட அபிஷேகம் முதலியன நடைபெறும்

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்க பரீட்சைகள் 1960

1960-ம் ஆண்டு "நவம்பர்" மாதத்துக்கெனக் குறிக்கப்பட்டிருந்த வை சங்கப் பரீட்சைகள் தவிர்க்கமுடியாத காரணங்களால் வருகிற ஆண்டு (1961) ஜனவரி மாதக்கடைசி வாரத்துக்கெனப்பின்போடப்பட்டிருக்கின்றன. இம்மாற்றத்தைப் பரீட்சார்த்திகள் கவனிக்குமாறு அதிவிநயத்தோடும் வேண்டப்படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்கதண்புனல்-வேந்தனுமோங்க [குக
ஆழ்கதீயதெல்லாம்அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சார்வரி வ கார்த்திகை மீ
கo உ வெள்ளிக்கிழமை

தாரை வார்த்துத் தானங் கொடுப்பதா?

எடுக்கும் நாள் எதிரே வருகின்றது. பள்ளிக்கூடங்களைப் பாரம் எடுக்கும் நாளா, பழைய பாரம்பரியத்தை விடுக்கும் நாளா, முன்னோர் மூதறிஞர் எண்ணத்தில் உதித்த இயக்கத்தில் விளைந்த கல்விக் கழகங்களை இன்னாள் அன்னார் சார்பாகச் செயலாற்றுகின்றவர் தாரை வார்த்துத் தானங் கொடுக்கும் நாளா? எப்படி எடுத்துரைப்பது இந்த நிகழ்ச்சியை!

பள்ளிக்கூடங்களை எடுக்கும் திட்டம் சட்டமாய் விட்டது, ஆகையால் இனி என்னசெய்வது, ஒன்றுஞ் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றோம்; குளிர்ந்த மனத்துடன் கொடுத்துவிடுவோம் என்று புத்திபுகட்டுகின்றவர்களும் தமிழகத்தில் இருக்கின்றார்கள். யார் இந்த நிலையங்களை நிறுவினார்கள், என்ன நோக்கத்துடன் பணியாற்றினார்கள், எந்த இலட்சியத்துக்காக உபகாரிகளாக இயங்கினார்கள் என்பதை எள்ளளவும் எண்ணாது பேடிகள்போன்று கண்மூடிக்கொண்டிருக்கும் முறையை நாடிச்செல்லுங்கள்என்று மதிமொழிஉதவுகின்றவர்களும் அநேகர் உளர்.

இந்நாட்டில்இப்பொழுது இயங்கி வருகின்ற சைவக் கல்லூரிகளின் வரலாற்றை அறிந்தவர்கள்வளர்ச்சியை அவதானித்தவர்கள் வருங்கால விளைவை ஊன்றி ஆய்ந்தவர்கள் செய்நன்றி மறக்கின்ற பான்மையில் எடுத்துக்கொடுக்கும் பணியை மேற்கொள்ளமாட்டார்கள் என்பது உண்மை.

பள்ளிக்கூடங்களின் பொறுப்பு யாருடையது. பெற்றாரும் அந்நிலையங்களுக்கு உற்றாராக உதவி புரிந்தவர்களும், ஆங்கு கல்வி பயின்றவர்களும் என்னவகையில் இதைப் பற்றி எண்ணுகின்றார்கள், எதைச் செய்ய விரும்புகின்றார்கள் என்பதை அறியாமற் பள்ளிக்கூடங்களை உள்ளத்துவகையுடன் அரசினர் கையிலே தள்ளிவிடுவதுதான் செய்யத்தக்கதென்றெண்ணுவது தருமமாகாது, மரபாகாது.

பெரிய நிலையங்களின்நிருவாக அலுவல்களைச் செய்கின்றவர்களின் கடமை எத்துணைப் பொறுப்புடையது? நெருக்கடி நிலைமையில இருக்கின்ற பொறுப்பை இயலாதென்று இயம்புகின்றவர்களின் மனச்சான்றுதான் என்னை?

சைவப்பிள்ளைகள் அச்சமயச் சூழலில் இயங்குகின்ற கல்வி நிலையங்களிற் பயிற்றப் பெறுவதற்குப் பொன்னும் பொருளும் பொருந்திய அளவுக்குப் பெற்றுக்கொள்ள முடியாதென்று யாரும் சொல்லுவார்களா? இறைவன் திருவருளை முன்னிட்டு எக்கருமத்தையும் நிறைவேற்றிவிடலாம் என்ற பண்பமைந்த சைவ மரபினர் அகத்தில் ஆற்றாமை என்னும் அச்சம் எழுமா?

மண்பாதலம்புக்கு மால்கடல்
முடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர்
வீழினும் அஞ்சல் நெஞ்சே
திண்பால் நமக்கொன்று
கண்டோம் திருப்பாதிரிப்புலியூர்
சுண்பாவு நெற்றிக் கடவுட்
சுடரான் கழலிணையே.

இறைநெறி வாழ்ந்த இராமநாத வள்ளல்

முப்பதாண்டுகளுக்கு முன் இவ்வுலக வாழ்வு நீத்த இராமநாத வள்ளலை இக்காலத்தில் ஒவ்வொரு நாளும், — இல்லை, நாழிகைப்பொழுதிலும் எண்ண வேண்டியவர்களாய் இருக்கின்றோம். தாய் மொழிக்குத் தகைமையை நீக்கவும், சமயக்கல்வி அமைந்த நிலையங்களை இல்லாதொழிக்கவும், இனத்தொகையால் ஆட்சிபீடத்திலமர்ந்தவர்கள் இடையூறான இயக்கங்களை உண்டுபண்ணிவரும் இந்நாட்களில் இறைநெறி வாழ்ந்து இலங்கைக்கு எழிலும், இந்நாட்டு இனங்கள் யாவும் ஒன்றுக்கு ஒன்று எடை குறையாது விளங்கும் வரிசையும் ஆக்கி வைத்த பேரறிஞர் கொடைவள்ளல் குணக்குன்று வீரர் இராமநாதன் அவர்களை நினைந்து நினைந்து நாட்டுக்குத் தொண்டாற்றும் நல்ல பண்பை நாம் பெற முயல்வதே ஒரே ஒரு வழியாகத் தோன்றுகின்றது.

சைவமும் தமிழும் வளர்க்கத் தனிப்பெருங் கல்விக் கழகங்களை நிறுவிய இராமநாத வள்ளலின் பல்கலைக் கழகக் கனவு இன்று நனவாகியதென்ற தொன்றே இன்னற்பட்டிருக்கும் தமிழ் இனத்துக்கு ஆறுதலை அளிக்கின்றது. உத்தம உலோகோபகாரியின் உதார குணத்தைப் பின்பற்றி ஏனைய சைவக் கல்விக்கழகப் பொறுப்பாளர்களும் தொண்டாற்றுவார்களேயானால் பள்ளிக்கூடங்களை எடுக்கும் சட்டம் பயனற்றதாகு[illegible] இராமநாதன் [illegible] சிறப்பு வாழ்க என்றும்.

வல்லவன் இராமநாதன் வழிவழியாக வாழ்வோம்

(வித்துவான், க வேந்தனார்)

ஆற்றலும் அறிவும் தேசும் அரசறி பெரிய வாழ்வும்
தோற்றமும் தோண்டு செய்யத் துடித்திடும் தூயநெஞ்சும்
மாற்றலர் வணங்கும் பேச்சு வன்மையும் புகழும் மாண்பும்
ஏற்றவன் ராம நாதன் ஈழத்தின் தெய்வம் என்போம்.

வான்தரங் கங்கைபோல வரும்பெரு மரபில் வந்தோன்
தேன்தரும் தமிழும் மேலாம் சிவநெறித் திருவும் வீறத்
தான்தரும் செல்வம் எல்லாம் தவநெறிப் படுத்த சான்றோன்
ஏந்தவேம் ராம நாதன் எழிச்சிபல் ஊழி வாழ்க.

ஈழத்தின் மக்கள் என்றும் இனமதப் பூசல் இன்றி
வாழத்தன் வாழ்வில் நல்ல வழிகளை வகுத்த வண்ணம்
ஆழத்தெண் கடலுள் மூழ்கி அலைந்துமுத் தெடுத்தல் போல
ஈழத்தின் இசைநின் றோங்க உழைத்தவன் ராம நாதன்.

சரியைநற் கிரியை யோடு சாற்றிடும் யோகம் ஞானம்
குருவருள் நெறியாற் கூடும் கோமகன் குலத்தின் பண்பால்
அரியன ஆய்ந்து செய்வோன் அண்ணலெம் ராம நாதன்
தருமநற் பயனால் மீண்டும் தழைத்தது தமிழன் சால்பு.

எல்லையில் லாத அன்பால் ஈசனை ஏத்தி ஏத்தி
நல்லன புரிந்த ராம நாதனின் தவத்தால் இன்று
பல்கலைக் கழகந் தோன்றி அவன்புகழ் பரப்பக் கண்டோம்.
வல்லவன் ராம நாதன் வழிவழி மலர்ந்து வாழ்வோம்.

படிப்பற்றவர்களுக்கு கல்விபுகட்டும் விண்வெளித்திட்டம்

படிப்பற்றவர்களுக்குக் கல்வி புகட்டுவதில் விண்வெளித் திட்டங்கள் அளப்பரிய சேவைகள் புரியுமென ஐ. நா. கல்வி, விஞ்ஞான, கலாசார ஸ்தாபனம் (யூனெஸ்கோ) நம்பிக்கை தெரிவித்துள்ளது.

வான வெளிக்கு செயற்கைக் கிரகம் அனுப்பி அதன் மூலம் உலகின் பல பாகங்களில் கல்வி புகட்டுமாறு "டெலிவிஷன்" சேவையை ஆரம்பிப்பதற்கு பிரான்ஸ் தேசம் கொண்டுவந்த பிரேரணையை "யூனெஸ்கோ" பொதுச்சபை சனியன்று ஏகமனதாக ஆதரித்து வாக்களித்துள்ளது.

இதனை உருவாக்குவதற்கான திட்டம் தீட்டுவதற்கு எதிர்வரும் இலையுதிர் காலத்தில் "யூனெஸ்கோ" பொதுச் சபைக்கல்விமான்கள், தந்திப் போக்குவரத்துத் தொழில் நுட்பசாலிகள் மற்றும் நிபுணர்களைக் கொண்ட மகாநாட்டைக்கூட்டும். (அ. செ.)

விளக்கீடு உணர்த்தும் உண்மை

இறைவனை வேண்டி இன்னல்களை நீக்கும் வழி

சோதியே சுடரே சூழொளி விளக்கே சுரிகுழற்பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் நின்றாய் பங்கயத்தயனுமாலறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில் நிறைமலர்க்குருந்தமேவியசீர்
ஆதியே அடியேன் ஆதரித்தழைத்தால் அதெந்துவே என்றரு ளாயே.

மணிவாசகப் பெருமான் அருளிய அருட்பத்தில் மேலே கண்டவாறு சோதியே சுடரே என்று சிவபிரான் விளிக்கப் பெற்றமை இங்கே நாம் சிந்திக்க வேண்டியதொன்றாகின்றது. சிவபிரான் ஞானசொரூபியாய் — ஒளிவடிவினராய் — உள்ளாரென்பது மணிவாசகப்பெருமான் காட்சிப்பிரமாணத்தாற் கண்டதுணிபாகும்.

சைவசித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றாகிய சிவப்பிரகாசத்திலே,

ஒளியான திருமேனி
யுமிழ்தான மிகமேவு
களியார வருர்யானை
கழலாளு மறவாமல்
அளியானு மலர்தூவு
மடியார்க ளுளமான
வெளியாகும் வலிதாய
வினைகூட நினையாமே.
ஓங்கொளியா யருண்ஞான
மூர்த்தியா கியுலகமெலா
மளித்தருளு முமையம்மை
தேங்கமழு மலரிதழி [காணத்
திங்கள்,கங்கை திகழரவம்
வளர்சடைமேற் சேர வைத்து
நீங்கலரும் பவத்தொடர்ச்சி
நீங்க மன்று
ணின்றிமையோர் துதிசெய்ய
நிருத்தஞ் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள்
சிரசின் மேலும்
புந்தியிலு முறவணங்கிப்
போற்றல் செய்வாம்.

எனவரும் விநாயக, நடராசர் வணக்கங்களிலே "ஒளிபான திருமேனி", "ஓங்கொளியா யருண்ஞான மூர்த்தியாகி" என்னும் சொற்றொடர்களும் சிந்திக்கவேண்டியவையாகின்றன.

சமயாசாரியர்கள் சந்தானாசாரியர்கள் ஆகிய இருசாராரும் சிவபிரானை ஒளிவடிவினராய்த் தரிசித்தார்கள் என்பது இவற்றால் நாம் அறிவதாகின்றது.

ஒளி எங்கேயுண்டோ அங்கே இருளில்லை என்பது யாவரும் அறிந்த உண்மை. ஒளிவடிவினராகிய சிவபிரான் அந்த இங்கு எனுதபடி எங்கும் பிரகாசமாய் நிற்பவர். "அகர உயிர்போல் அறிவாகி" எங்கும் நிறைந்து நிற்பவர். "அவனன்றி ஓரணுவுமசையாது" என்றபடி அவருடைய திருவருளால் அன்றி எந்த ஒரு நிகழ்ச்சியும் நிகழ்வதேயில்லை. ஆனால் மக்களோ இவ்வுண்மையை உணர்ந்து தங்கள் வாழ்க்கை தூய்மைப்படுமாறு அமைப்பதில்லை. அந்தளவில்தானும் நில்லாது அழுக்கைப்பெருக்கி அகங்கார இருளிற் சென்று அல்லற்படுவதே இன்று பெருநெறியாகப் போற்றப்படுகின்றது. அவ்வாறு செல்வோரையே பாமரமக்கள் பின்தொடர்கின்றனர்.

இந்நிலைமையிலே உண்மையை உணர்த்தி உய்தி நெறி காட்டும் பொருட்டே பிரம விட்டுணுக்களின் கதை மேன்மேலும் சொல்லப்பட்டு வருகின்றது. பிரமா படைத்தற் கடவுள். விண்டு காத்தற் கடவுள். கடவுள் எனப்பட்டபோதும் இவர்கள் உயிர்களே என்பது ஒவ்வொருவரும் அறிய வேண்டியதொன்று கர்ப்பாந்தகாலமொன்றிலே இவர்கள் ஒவ்வொருவரும் தாமே முழுமுதல் என்று தர்க்கித்தனர். பெருஞ் சமரொன்றுண்டாயது. இவர்கள்பாற் கருணை கொண்ட சிவபிரான் இவர்களுக்கிடையில் ஒளிவடிவாய்த் தோன்றினார்.

"கடுவெஞ்சின மொடுதம்படை
விடுகின்றனர் கடிதின்
றடுவெங்கள மிசைதுஞ்சுவ
அரியம்புவ ரெனவே
சுடு வெங்கனல் சிகைகொண்
டெழு சுடரின்றிரள் வடிவாய்
நடுநின்றனன் மதியம்பொதி
நளிர்செஞ்சடை முதல்வன்"

என வரும் சிவராத்திரி புராணச் செய்யுள் இவ்வுண்மையை அறிபத்தருகின்றது.

முறையே பன்றியும் அன்னமுமாய் அடிமுடி தேட முயன்று அடிமுடிகாண முடியாதவராய் இருவரும் வருந்தி நிற்ப, சிவபிரான் கருணை கூர்ந்து தாமே முழுமுதற் கடவுள் என்னும் உண்மையை உணரச் செய்தருளினார். விளக்கீடு இவ்வுண்மையையே எமக்குணர்த்துகின்றது.

இப்புண்ணிய தினத்திலே இவ்வுண்மையை உணர்ந்து, "ஆதரித்தழைத்தால் அதெந்துவேயென்றருளாயே" என்று மணிவாசகப் பெருமான் வேண்டியவாறு நாமும் இறைவனை வேண்டி எம்மைத் தொடர்ந்து நிற்கும் இன்னலை நீக்க முயல்வோமாக.

திருக்கேதீச்சரத்தில் நவோத்தரசதசங்காபிஷேகம்

திருக்கேதீச்சரத்தில் அண்மையில் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட விநாயகர், புராதன மகாலிங்கம், சுப்பிரமணியர் ஆகியமூர்த்திகளுக்கு மண்டலாபிஷேகக் கடைசி நாளாகிய புதன்கிழமை கார்த்திகை 15-ந் திகதி (30-11-60) பகல் வேறு வேறாக நவோத்தர சதசங்காபிஷேகமும் விசேட பூசையும் நடாத்தப்படும். இரவு 8 மணியளவில் ஸ்ரீ திருக்கேதீச்சரநாதர் கௌரியம்பாள் சமேதராய் விநாயகப் பெருமானுடனும் சுப்பிரமணியப் பெருமானுடனும் எழுந்தருளி வீதிவலம் வரும் விழாவும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக வரலாறு

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

பாடி பாக்கம் என்பவை எவை?

அவற்றில் வாழ்ந்தோரின் வாழ்க்கை முறை என்ன?

34. பாடி

காட்டிலும், காடுசார்ந்த நிலத்தும் உள்ள ஊர் பாடி அல்லது சேரி என அறியப் பட்டது. அங்குவாழும் மக்கள் ஆயர், இடையர், கோவலர், அண்டர் முதலிய பெயர்கள் பெற்றிருந்தனர். இவர்கள் தடிகளாற்கட்டி மண்ணினாற் சுவர் எழுப்பிப் புல்லால் வேய்ந்த கொட்டில்களில் வாழ்ந்தார்கள். முற்றத்தே ஆடுகளையும் மாடுகளையும் கட்டும் முளைகள் நாட்டப்பட்டிருந்தன. இடையர் ஆட்டிடையர், மாட்டிடையர் என இருதிறத்தினராகவிருந்தனர். மாட்டிடையர் எருமைகளையும் வளர்த்தனர். இடையனது கையில் தலை வளைந்த கோல் அல்லது கொளுதடி இருந்தது. ஆட்டிடையன் வளைவுதடியில் பறியைக் கொளுவி முதுகுப்புறத்தே தூங்குமபடி விட்டுச் சென்றான். இடையர் காலையில் ஆடுகளையும், மாடுகளையும் மேய்ச்சல் நிலத்துக்கு ஓட்டிச் சென்றார்கள்; அவை மேயும் போது அவர்கள் மர நிழல்களிலிருந்து வேய்ங்குழல், கொன்றைப்பழத்தைக் கோதிச் செய்த குழல், ஆம்பற்றண்டுக்குழல் என்பவற்றில் இனிய இராகங்களைப் பாடினார்கள். மாலைக்காலத்தில் ஆடுகள் பட்டியில் அடைக்கப்பட்டன. பாற்பசுக்கள் வீட்டுக்கு ஓட்டிச் செல்லப்பட்டன. மாடுகளின் கழுத்தில் மணிகள் கட்டப்பட்டிருந்தன. மாடுகள் நடக்கும்போது மணிகள் 'தெள்' என்று ஓசை செய்தன. இடையர் பசுக்களின் பின்னே வேய்ங்குழல் ஊதிச் சென்றனர். மாடுகள் தொழுவங்களிற் கட்டப்பட்டன, அல்லது மன்றங்களில் அடைக்கப்பட்டன.

பசுக்களில் கறக்கப்பட்ட பால் பிரையிட்டுத் தயிராக்கப்பட்டது. இடைச்சி தாழியில் உறைந்த தயிரை மத்தால் கயிறுபூட்டிக் கடைந்தாள்; வெண்ணெயை எடுத்த பின் மோரைப் பானையில் ஊற்றிப் பானையைச் சும்மாட்டின்மீது தலையில் வைத்துச் சுமந்து அயலிடங்களிற் சென்று நெல்லுக்கு விலையாக விற்றாள்.

இடையன் நிலத்தை உழுது வரகு விதைத்தான். இடையர் குடியிருப்பைச் சுற்றி முள் வேலி இடப்பட்டிருந்தது.

35. பாக்கம்

கடற்கரை ஊர் பாக்கம் எனப்பட்டது. அங்கு வாழ்ந்தோர் பரதவர் எனப்பட்டனர். மணல் செறிந்த கடலோரங்களில் பனை மரங்கள் செழித்து வளர்ந்தன. குடிசைகள் புல், தாழை ஓலை அல்லது பனை ஓலையால் வேயப்பட்டன. வீட்டைச் சுற்றித் தாழை வேலி இருந்தது. முற்றத்தில் மீன் பிடிக்கும் வலைகள் காய விடப்பட்டிருந்தன. பரதவர் கட்டுமரம் திமில் என்பவற்றில் மீன் பிடிக்கக் கடலிற் சென்றார்கள். வலை, எறிஉளி என்பவற்றை அவர்கள் எடுத்துச் சென்றார்கள்; தாம் பிடித்த மீன்களுடன் அவர்கள் காலையிற் கரையை அடைந்தார்கள். அவர்களின் மனைவியர் அவற்றைக் கூடைகளில் எடுத்துச் சென்று அயலிடங்களில் நெல்லுக்கு விலையாக விற்றார்கள்; மீன் விற்றது. முற்றத்தில் மீன் பிடிக்கும் வலைகள் காய விடப்பட்டிருந்தன. பரதவர் கட்டுமரம் திமில் என்பவற்றில் மீன் பிடிக்கக் கடலிற் சென்றார்கள். வலை, எறிஉளி என்பவற்றை அவர்கள் எடுத்துச் சென்றார்கள்; தாம் பிடித்த மீன்களுடன் அவர்கள் காலையிற் கரையை அடைந்தார்கள். அவர்களின் மனைவியர் அவற்றைக் கூடைகளில் எடுத்துச் சென்று அயலிடங்களில் நெல்லுக்கு விலையாக விற்றார்கள்; மீன் விற்றதாற் கிடைத்த நெல்லை அரிசியாக்கிச் சோறட்டுத் தமது சுற்றத்தோடு இருந்து உண்டார்கள்.

திரு. ந. சி. கந்தையாபிள்ளை

கடற்கரைகளில் புன்னை மரங்கள் ஓங்கி வளர்ந்தன. அவற்றின் அயலிலே மீன் இறால் முதலியன காயவிடப்பட்டன. பரதவர் சிறுமியர் புன்னை நிழலிலிருந்து அவற்றைக் கவர வரும் புட்களை ஓட்டினார்கள்.

உப்பங்களில் பாத்தி கட்டி உப்பு விளைவிக்கப்பட்டது. உப்பை வண்டிகளில் ஏற்றிக் கொண்டு உப்பு வாணிகர் தொலைவிடங்களுக்குச் சென்றார்கள். அவர்களோடு வீட்டில் வளர்க்கப்படும் குரங்கும் சென்றது. தொலைவிடங்களுக்குக் கொண்டு சென்ற உப்பை அவர்கள் நெல்லுக்கு விலையாகக் கூவி விற்றார்கள். உப்பு வாணிகரோடு சென்ற குரங்கு வீடுகளில் விளையாடும் சிறுவரின் கிலுகிலுப்பையை எடுத்து விளையாடினது. வண்டியிற் பூட்டிய எருதுகள் இளைத்தால் மாறிப் பூட்டுவதற்கு உப்புவாணிகர் எருதுகளை வண்டியின் பக்கத்தே கொண்டு சென்றனர். அவர்கள் வெளியிடத்தே தங்கி அடுப்பு மூட்டிச் சமையல் செய்து உணவு கொண்ட பின் பயணஞ் செய்தார்கள். உப்பு வாணிகர் கழுதைகளிலும் உப்பு மூடைகளை ஏற்றிக்கொண்டு சென்றனர். பெண்கள் கூடைகளில் உப்பை எடுத்துச் சென்று நெல்லுக்கு விலையாக விற்றனர்.

பரதவச்சிறுமியர்கடற்கரை மணலில் பாவை செய்தும் சிறுவீடுகட்டியும், சிறுசோறு சமைத்தும்விளையாடினார்கள். மரக்கலங்கள் கரை அறிந்து துறைபிடிக்கும் பொருட்டுக் கடற்கரையில் உயர்ந்த வெளிச்ச வீடுகளிருந்தன. அவை கலங்கரை விளக்கங்கள் எனப்பட்டன. பரதவர் தமது குடிசைகளில் மண் விளக்கில் அல்லது சிப்பிகளில் மீனெண்ணெய் விட்டு விளக்கெரித்தார்கள்.

—தொடரும்.

சமய தீட்சை

—::—

கொக்குவில் மேற்கு ஸ்ரீ: ஞானபண்டித வித்தியாசாலையில் ஐப்பசிக்கடைசி வெள்ளியன்று 70-க்கு மேற்பட்ட சைவப்பிள்ளைகளுக்கு வேதாரணியம் உயர் திரு. கல்யாண சுந்தரக்குருக்கள் அவர்களால் சமய தீட்சை அளிக்கப்பட்டது. சமுகங் கொடுத்தோர்க்கு, சமய தீட்சையின் மகிமையையும் அதனை அநுட்டிக்கும் முறைமையையும் குருக்கள் அவர்களும், மேற்படி பாடசாலைத் தலைமையாசிரியர் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள்,

குறித்த பாடசாலை கொக்குவில் சைவப்பிரசாரகர் ஸ்ரீமத் த குமாரசாமிப்பிள்ளை அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டுச் சைவவித்தியா விருத்திச் சங்க முகாமையின் கீழ் நடைபெற்றுவருகிறது. இப்பாடசாலை வருடந்தோறும் கிரமமாகச் சமயதீட்சை வைத்து

தமிழுக்குண்டாயிருக்கும் ஆபத்து

உலகத்திலே என்று உயிரினங்கள் தோன்றினவோ அன்றுதான் உயிரினங்களுக்கிடையே உள்ள ஆண் பெண் என்ற வேறுபாடுகள் உண்டாயினவென்றல் பிழையாகாது. ஆண் பெண் சேர்க்கையின்றி எந்த உயிரினங்களும் தங்கள் சந்ததியைப் பெருக்கிக்கொள்ள இயலாது என்பது அறிஞர்கண்ட உண்மை.

காலம் மாறிற்று. மனிதன் இயற்கையை உற்று நோக்கத் தலைப்பட்டான். அன்றுதான் மனிதனுக்கு 'விடி

திரு. இ. நா. தியாகராசா, சாவகச்சேரி.

வெள்ளி' தென்பட்டது. மனிதன் இயறகையைத் தன் அறிவுக்கெட்டியபடி ஆராய்ந்தான். நாகரிகம் வளரத் தலைப்பட்டது

வரும் வழக்கமுடையதென்பது விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

அன்று பாவனைகளால் ஒருவர் கருத்தை மற்றவன் அறிந்தான். அதன்பின் குறியீடுகள் மூலம் எண்ண அலைகளைத் தெரிவிக்கமுயன்றான்.

குறியீடுகள் பாவித்தகாலம் மனிதன் கல் ஆயுதங்களைப் பாவித்து வேட்டையாடி உண்டு மகிழ்ந்த காலம். இப்படியாகக் காலமும்செல்ல மனிதன் எழுத்து முறைகளையும் கண்டுபிடிக்கத் தலைப்பட்டான். பண்டு தோன்றிய மொழிகள் நான்கு. அவை யாவன: கிரேக்கம், லத்தீன் ஈபுறு, தமிழ். காலமும் சென்றது. உலகில் புதுப்புது மறு மலர்ச்சிகள் தோன்றின. இடைக் காலத்தில் கிரேக்கம், லத்தீன், ஈபுறு ஆகிய மூன்று பாஷைகளும் பேச்சு வழக்கற்று அழிந்து ஒழிந்து போக தமிழானது எழுத்து, பேச்சு வழக்குகளோடு கன்னித் தன்மையாக விளங்குகின்றது. இம் மொழிக்கு இன்று ஏற்பட்டுள்ள ஆபத்தை நீக்குதற்குத் தமிழ் மக்களாயுள்ள ஒவ்வொருவரும் முயலுதல் வேண்டும்.

—

கூடிவாழும் உயிரினத்தால் வரும் கெடுதி

—:0:—

கூத்தப்பெருமானது திருக்கூத்தின் ஒரு காட்சி

—:0:—

(முற்றொடர்-5)

உண்ணிகள்:

இவற்றில் பல இனங்களுண்டு. (1) சருகுண்ணி, (2) தாரா உண்ணி, (3) நாய் உண்ணி, (4) காட்டுண்ணி இவைகள் கடித்தாலும் விஷமுண்டு, கடித்த இடம் சிறு கடுப்புடன் வீக்கம்தோன்றிக் கடிவாயில் புண் உண்டாகி நீர் வடியும். இவைகளில் சில காதுத் துவாரங்களுக்கூடாகச் சென்று அங்கு விருத்தியாகியும்விடும். ஆகையால் இவைகள் நமது வீடுகளில் பரவாதபடி பாதுகாப்பாக இருத்தல் வேண்டும். சில உண்ணிகள் வயிற்றுக்

விஷ வைத்தியர்
திரு. க. சிற்றம்பலம் அவர்கள்

குள் சென்று பலவிதமான நோய்களுக்குக் காரணமாகி விடும். வயிற்றுள் சென்றால் வாந்தி, வயிற்றுக்குத்து, வயிற்று எரிவு முதலிய குணங்களுண்டாகும். தக்க மருந்துகளால் குணமாக்கி விடல் வேண்டும். கவலையீனமாக இருந்தால் மிகுந்த துன்பம் உண்டாகலாம்.

தவளைகள்:

தவளைகள் பாம்புக்கு இரையானவை. அவையும் சில சந்தர்ப்பத்தில் மக்களைத்தாக்கும்: தாக்கினால் அற்ப விஷமாகும். தவளைகளின் இறந்த எலும்புகள் எங்கள் கால்களில் தாக்கினால் விஷமாகும். இதனால் புண்ணுண்டாகும். இதற்கும் விஷ சிகிச்சைதான் ஏற்றது.

அட்டைகள்:

நாட்டின் சுவாத்தியத்துக்கேற்ப, பலவிதமான அட்டைகளை நாம் காண்கின்றோம். இதன் விருத்தி அதிகமாகும். இவையும் மக்களைத்தாக்கும். மலைநாட்டிலுள்ள அட்டை மக்களின் இரத்தத்தைக் குடிக்கும் தன்மைவாய்ந்தது. இதன் விஷத்தால் சொறி, சிரங்கு முதலிய சர்மரோகங்களுண்டாகும். அட்டைகள் கடித்தவுடனே புகையிலையின் கசாயமும் குப்பைமேனிச்சாறும் உப்பும் கலந்து கடிவாயைத் துப்புரவு செய்தால் விஷமிறங்கும்.

வீட்டு மிருகங்கள்:

நமது வீட்டில் ஆடு, மாடு, குதிரை, கழுதை, எருமை முதலிய பிரயாணிகளை நமது பிரயோசனத்துக்காக வளர்க்கின்றோம். அவையும் சில சந்தர்ப்பங்களில் நம்மைத் தாக்குகின்றன. இவைகள் கால்களால் மிதிக்கும், தந்தங்களால் தாக்கும் (கடிக்கும்) கொம்பினால் முட்டும். ஆனால் தந்தங்களால் தாக்கும் பொழுதுதான் விஷமாகும். விசர் நாயால் தாக்கப்பட்ட மிருகங்கள் நம்மைத் தாக்கினால் கொடிய விஷமாகும். சாதுவான பிராணி நம்மைத் தாக்கும்போது அதன் சூழலையும், சந்தர்ப்பத்தையும் ஆராய்ந்து உடனே சிகிச்சை முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

எறும்புகள்: உலகத்தில் கோடிக்கணக்கான எறும்புகளுண்டு. அவற்றிலும் பல இனங்களுண்டு. நாட்டுக்கும் சுவாத்தியத்துக்கும் ஏற்றவாறு வகைகளும், விருத்தியும் உண்டாகின்றன. இவைகள் ஒற்றுமையிலும், சுறுசுறுப்பிலும் நமக்குப் பாடம் கற்பிப்பவை. எறும்புகளைப் போல் ஒற்றுமையும் சுறுசுறுப்பும், நம்மிட மிருக்குமாயின் நாம் நமது உரிமைகளையும், கடமைகளையும் பொருளாதார வளங்களையும்பெருக்கிப் பெரும் புகழ் பெற்று வாழலாம். எறும்புகள் தங்கள்

(தொடர்ச்சி 4 -ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் நுட்பக் கல்லூரி

(SCHOOL OF TECHNOLOGY)

சுண்டிக்குளி யாழ்ப்பாணம்

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை (G. C. E. Advanced Level) பொருளாதாரம் (Economics):—

ஆகஸ்ற்றில் வகுப்பு ஆரம்பமாகின்றது. பாடம் ஒன்றுக்கு மாதச்சம்பளம் ரூபா. 10/-. தகுதிவாய்ந்த கல்வியறிஞர் ஒழுங்கான பயிற்சியளிப்பர். சேரவிரும்பும் மாணவர் உடனே விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்.

தலைமை ஆசிரியர்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

மட்டுவில் தெற்கு
இராமலிங்கம் திசைவீரசிங்கம்
—வழக்காளி.

இல. 91/M.

எதிராக

சாவகச்சேரி

1. இளையதம்பி யோகநாதன் மட்டுவில் தெற்கு
2. திசைவீரசிங்கம் தில்லைநாதன்
—எதிராளிகள்.

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில் 91/M-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1960-ம் ஆண்டு டிசம்பர் (மார்கழி) மாதம் 19-ம் திகதி (19-12-60) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 4440-ம் இதில் ரூபா 3000-க்கு 8-6-59 திகதி தொடக்கம் 17-11-59 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 212-20 சதம். இதில் ரூபா 75 இறுபட்டது.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று சாவகச்சேரியிறை 'தேவர் புலம்" நிலைப்பரப்பு 2-ம் குளி 14½-ம் பயிர்களும் கல்வீடும் கிணறும். எல்லை கிழக்கு வினாசித்தம்பி கைம்பெண் விசாலாட்சிக்கும் மக்களுக்குமுரிய ஆதனம், வடக்கு சின்னத்தரை பெண் கனகம்மாவின் ஆதனம். மேற்கு செல்லையா பெண் கற்பகவல்லிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு றோட்டு இதடங்கலும்.

2. மேற்படி சாவகச்சேரியிறை "மயிலன்கரையடிசுடலைப்பிட்டி" நிலைப்பரப்பு 37-ம் குளி 5-ம் இதில் நடுப்புற நிலைப்பரப்பு ஒன்றும். எல்லை கிழக்கு கனகர் சிவசம்புவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு றோட்டு. மேற்கு பொன்னையா யோகலிங்கத்தின் ஆதனம். தெற்கு கடற்கரை. இதடங்கலும்.

3. மேற்படி சாவசச்சேரியிறை "வெல்லன்காடு" நிலைப்பரப்பு 6-ம் குளி 3-ம் எல்லை கிழக்கு செல்லையா பெண் சின்னத்தங்கத்தின் ஆதனம். வடக்கு தம்பிப்பிள்ளை சோமசுந்தரத்தின் ஆதனம். மேற்கு வாரிவனநாதசிவன் கோவில் ஆதனம். தெற்கு சேதர் கந்தையாவின் ஆதனம் இதடங்கலும்.

4. மேற்படி சாவகச்சேரியிறை "புல்லாந்திக்கிராய்" நிலைப்பரப்பு 1½-ம் எல்லை கிழக்கு கதிரவேலு பெண் முத்துப்பிள்ளையின் ஆதனம். வடக்கு சேதர் கந்தையாவின் ஆதனம். மேற்கு செல்லையா பெண் சின்னத்தங்கத்தின் ஆதனம். தெற்கு தம்பிப்பிள்ளை சோமசுந்தரத்தின் ஆதனம். இதடங்கலும்,

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer & Licensed Auctioneer.

தெல்லிப்பழை, 1-11-1960.
M 146 25-11-60

கோட்டு விற்பனவு விளம்பரம்

புன்னாலைக்கட்டுவன்
அம்பலவாணர் வேலுப்பிள்ளை
வழக்காளி,

இல. M. B. 2953

எதிராக

சிறுப்பிட்டி நீலயினார் மகள் அன்னம் - எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B. 2958 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1960 ம் ஆண்டு டிசெம்பர் (மார்கழி) மாதம் 21ம் திகதி (21-12-60) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 2930 ம், இதில் ரூபா 2000 க்கு 30-7-59 திகதி தொடக்கம் 19-1-60திகதி வரைக்கும் 100 க்கு 6 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 267-12 சதம்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர்க் கோயிற்பற்று சிறுப்பிட்டியிறை "உத்தலனை வயல்" நெற்பரப்பு 36. இதில் மேற்குப் பக்கமாக நெற்பரப்பு (18ம்) எல்லை கிழக்கு இளையதம்பி பெண் அன்னப்பிள்ளையின் ஆதனம். வடக்கு அருணாசலம் செல்வராசாவின் ஆதனம். மேற்கும் தெற்கும் கனகர் பெண் முத்துப்பிள்ளையின் உருமைக்காறருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலும். முற்பதிவு K 126/267.

2. மேற்படிசிறுப்பிட்டியிறை "மதியந்தனை" நிலைப் பரப்பு பத்து (10ம்) கிணறும் செய்பயிர் வான் பயிர்களும் எல்லை கிழக்கு வல்லிபுரம் வினாசித்தம்பிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு சுப்பர் செல்லையாவுக்கும் பெண் தங்கம்மாவுக்குமுரிய ஆதனம். மேற்கு கந்தர் ஆறுமுகத்திற்கும் அருணாசலம் செல்லத்துரைக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை, இதடங்கலும். முற்பதிவு K. 126/268.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, & Valuer,
Licenced Auctioneer.

தெல்லிப்பழை, 4-11-1960.
M. 147 25-11-60.

கோட்டு விற்பனவு விளம்பரம்

உடுவில்
அரியம்மா குருகுலசிகாமணியின் கைம்பெண் —வழக்காளி,
வழக்கு இல. M.B. 1718

எதிராக

மல்லாகம்

1. துரையப்பா கந்தனுன கனகராயர் எதிராளி

தெல்லிப்பளை கிழக்கு

2. வேதவனம் தில்லையம்பலம்
3. பொன்னையா செல்லப்பா
4. செல்லப்பா மனைவி தையல் நாயகி

மல்லாகம்

5. அப்பாத்துரை சிவசுப்பிரமணியம்
6. சிவசுப்பிரமணியம் மனைவி சரோஜினிதேவி

சேர்க்கப்பட்ட கட்சிக்காரர்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 1718-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1960-ம் வருடம் மார்கழி மாதம் 10-ந் திகதி (10-12-60) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 5225-ம், 28-7-57 தொடக்கம் 12-9-57 வரைக்கும் ரூபா 4000-க்கு 7வீத வட்டியும், அதன் பின் முழுத்தீர்வைத்தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வத வட்டியும், கோடடுச் செலவு ரூபா 287-67 சதமும், இதில் ரூபா, 2000- கட்டப்பட்டுள்ளது,

காணியின் விபரம்.

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோயிற்பற்று, மல்லாகம் இறை, 'சல்லியவுடை' (SALLIYAVUDAI, நிலப்பரப்பு 9⅛. ஆட்சிப்படி நிலப்பரப்பு 10, கட்டிடங்களும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும். வடக் கெல்லைக்காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும். வழி வாய்க்கால் பாவிப்புரிமையும். எல்லை கிழக்கு றோட்டு. வடக்கும் மேற்கும் ஞானசேகரஐயர் குமாரசாமி ஐயருக்கும் சகோதரசகோதரிகட்கும் உரிய ஆதனம். தெற்கு பிள்ளையார் கோயிலின் ஆதனம். H 266/280-ல் பதியப்பட்டுள்ளது.

செ. பாண்டித்துரை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
Commissioner of Sales

மல்லாகம், 31-10-60.
(M. 149 21-10-60)

ஏந்திர கைத்தொழிற் சமாசம்

வரையறுக்கப்பட்டது

"த சிற்றடல்" சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
(தொலைபேசி 617—தந்தி ரெக்நோலொஜி)

பின்வரும் வேலைகள் செய்யப் பொறுப்பேற்கின்றது.

எல்லாவித நீர்க்குழாய்கள் (வாட்டர் பம்ஸ்), தட்டெழுத்து யந்திரங்கள், தையல் யந்திரங்கள், மின்சாரத்துறைப் பொருள்கள் (இலெக்றிக்கல் அப்பிளையன்சேஸ்) உதாரணமாக;

(அ) மோட்டார்கள், மின்சத்தி ஆக்கக் கருவிகள் (ஜெனறேற்றேஸ்) உஷ்ண ஆக்கக் கருவிகள் (ஹீற்றேஸ்) பட ஒளிப் பதிவுக்கருவிகள் (சினிமா புரொஜெக்ரேஸ்)முதலியவைகளின் திருத்தம்.

(ஆ) தராதரம்பெற்ற மின்சார வேலை வல்லுனரால் வீட்டுக்கு மின்சாரக்கம்பியமைத்தல்,

(இ) பேர்ப்பலகைகள், அறிகுறிப்பலகைகள் (சயின்போட்ஸ்) மைதீட்டியமைத்தல்.

நீங்கள் இளமைப் பருவத்தையடைய

சி. எம் சாமி

தங்க பஸ்பம்

உபயோகியுங்கள்.

தேகபுஷ்டியைத் தருவதில் இதற்கு நிகர் வேறுஇல்லை. உடல் பலத்தையும் இரத்த விருத்தியையும் பசியையும், உண்டாக்குகிறது. வாழ்க்கையில் இன்பத்தைத் தருகிறது. உஷ்ணம் இடுப்பு வலி, வாய்வு முதலிய வியாதிகளைக் குணமாக்குகிறது.

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ 35-00.

தாளக பஸ்பம் ஈளை, இளைப்பு, தொய்வு, இருமல், கடின சுவாசம், கோழை. கபக்கட்டு, பீனிசம் இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் குணமாக்குகிறது.

24 நாள் புட்டி 1-க்கு விலை ரூ 12-00
ஏஜெண்டுகள் தேவை. : கேட்லாக் இனும்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி SI.

கூடிவாழும் உயிர்.....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பகைவரைத் தாக்கும்போது கூட்டமாகவே தாக்கும். இவை புற்றுக்களில் மரப்பொந்துக்களில் பற்றைகளுக்குக் கீழ் வாழ்கின்றன. இயற்கையை அறியும் தன்மை இச் சிறு பிராணிகளுக்குண்டு மழையின் வரவை முன்கூட்டியே அறிந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும். இவை மக்களைத்தாக்கினாலும் விஷமாகும். கடித்த உடனே கடுக்கல், வலி, விறுவிறுப்பு, முதலியன உண்டாகும். பின்னர் அந்த இடத்தில் தடித்து வீங்கிப் புண் உண்டாகும். இதற்கும் விஷசிகிச்சைமுறைகளுண்டு.

—தொடரும்.

யாழ்ப்பாணம்

ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா

616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
எல்லாமாக அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயர்கள் நெஞ்சம்

கவனிப்பார்களா?

கொழும்பு கண்டி முதலிய நெடுந்தூரப் பிரயாணஞ் செய்வோர் பலர். ஆண்களும் பெண்களும் சமஉரிமை பெற வேண்டிய காலம். ஆனால், நெருக்கமாகப் பிரயாணஞ் செய்யும்போது சற்று இடம் விட்டு இருப்பது மனிதமுறை.

இப்போது வாலிபக்கூட்டத்தவர் பிறருக்கு இடம் இருப்பதற்கு விடாது தங்கள் பொருள்களையும் பெட்டிகளையும் மேலே வைப்பதோடு ஆசனத்திலும் வைத்துக் கொள்ளுகிறார்கள். புகைவண்டி புறப்பட்டபின் சீட்டாட ஆரம்பித்துவிடுகிறார்கள். அப்போது அடுத்தபக்க ஆசனத்து வைகிய சினேகர்கள் இப்பெருவிளையாட்டைக் கவனிக்கவும், நண்பருக்கு உதவி செய்யவும் வந்து நெருக்கும்போது முன்னிருந்த பெண்களும் ஆடவரும் படும் அவஸ்தை அதிகம் சண்டையும் மூளுகிறது. இதனைக் கவனிப்பார் உண்டா?

வ. மு. இரத்தினேஸ்வரன்

15-11-60

தமதடியார் பொருட்டுத் தெற்கே திரும்பிய பெருமான்

தாருகாவனச் சோதிலிங்கத் தலச் சிறப்பு

சிதம்பரம், கார்த்திகை. 5

நாகேசம் என்று கூறப்படும் தாருகாவனம் ஜோதிர்லிங்கங்களில் ஒன்றாக அமைந்துள்ளது, இத்தலம் வட இந்தியாவில் சோண்டி புகையிரத நிலையத்திலிருந்து சுமார் 14மைல் தூரத்தில் உள்ளது ஓரண்டா என்ற ஊரில் நாகேஸ்வரருடைய ஆலயம் உள்ளது. தாருகையும் தாரகனும் வசித்துவந்த காரணம் பற்றி இவ்வனத்திற்குத் தாருகாவனம் என்னும் பெயராம், இத்தலத்திலுள்ள சிவலிங்கப் பெருமானுக்கு நாகநாதர் அல்லது நாகேஸ்வரர் என்ற திருநாமம் வழங்குகிறது. இச் சிவலிங்கப்பெருமான் தெற்கு முகமாகத் திரும்பியிருக்கின்றார்; அதாவது பாணமிருக்கும் பீடத்திலுள்ள கோமுகம் கிழக்கு நோக்கியிருக்கின்றது, கிழக்குநோக்கி இருக்கும் கோமுகத்தோடு கூடிய சிவலிங்கப்பெருமானைக் காண்பது அரிதாகும். அக்காட்சியை இந்த ஸ்தலத்தில்தான் காணமுடியும். மேலும் நந்தி பலிபீடம் முதலியன கீழ்ப்புறமாகவே உள்ளன.

மேற்கண்டவாறு சிவலிங்கப்பெருமான் இருப்பதற்கு வரலாறு வருமாறு:- ஸ்ரீ நாம்தேவ் சுவாமிகள் ஒருநாள் இத்தலத்திற்கு வந்து ஈஸ்வரன் எதிரிலிருந்து பக்திப் பாடல் படித்துக்கொண்டிருந்தார்; அது சமயம் தங்கள் சந்தியாவந்தனாதி நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்யவந்துள்ள சிவப்பிராமணர்கள் ஸ்ரீ நாம்தேவ் சுவாமிகளைக் கூப்பிட்டு ஈசன் சந்நிதியை மறைக்காமல் இருந்து படிக்கும்படி சொல்லினர்; ஸ்ரீ நாம்தேவ் சுவாமிகள் "ஈசன் எந்தத்திசையைப் பார்க்கவில்லை? அவருக்கு எத்திசையில் முகமில்லையென்று கூறுங்கள்; யான் அத்திசைக்குச் சென்று படிக்கின்றேன்" என்று கூறினர். இவ்வார்த்தையைக் கேட்ட பிராமணர்கள் கோபங்கொண்டு ஓர் அதிகப்பிரசங்கி என்று எண்ணி எல்லோரும் ஸ்ரீ நாம்தேவ் சுவாமிகளை ஒன்று சேர்ந்து தூக்கிக்கொண்டுபோய் தென்புறத்தில் விட்டனர். திரும்பிவந்த பிராமணர்கள் அதுவரை வடக்கு முகமாக இருந்த கோமுகம் கிழக்குமுகமாகத் திரும்பியிருப்பதைக் கண்டார்கள். நாம் ஸ்ரீ நாம்தேவ் சுவாமிகளைத் தூக்கிக்கொண்டு போய் தென்புறத்தில் விட்டபடியால் ஈஸ்வரனும் அத்திசையை நோக்கித் திரும்பிவிட்டார். அதனால்தான் வடக்கேயிருந்த கோமுகம்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

கோயிலாக்கண்டிச் சிவன்கோயில் நிதி

	ரூ. ச.
முன் சேர்ந்த தொகை	628-50
டட்றர் S. சுப்பிரமணியம்	50-00
திரு. இ. சிவகுருநாதன் (புத்தூர் சோமாஸ்கந்தக்கல்லூரி)	18-15
	696-65

எல்லாமாய் இலங்குகின்றது திருநாமம்

எல்லையில்லா இன்பத்தை அது அளிக்கவல்லது

கடவுளையும் அவருடைய திருநாமத்தையும் வேறு வேறாகக் கருதக்கூடாது. கடவுளின் திருநாமம் கடவுளேயாகும். திருநாமத்தை நாங்கள் நினைத்தவுடன் கடவுளின் சந்நிதானம் எங்கள் மனத்தில் துலங்குகின்றது. எங்கள் மனத்தைக் கடவுளிற் பதித்தற்கு அவருடைய திருநாமத்தை இடைவிடாது ஓதுவதிலும் பார்க்கச் சிறந்த வழி எதுவுமேயில்லை.

கடவுள் பிரத்தியட்சமானவராயும், அல்லாதவராயுமிருக்கின்றார். அவ்விதமான கடவுள் இயல்பை விளக்கி நிற்கின்றது அவருடைய திருநாமம். இங்கே சர்வ வியாபகமாய், அகண்டமாய், நிர்விகாரமானதாய் இன்பமயமானதாய்உள்ள தன்மையே பிரத்தியட்சமல்லாததாயுள்ளதாகும். சொல்லும் பொருளும் எல்லா உயிர்களுமாயுள்ள தன்மையே பிரத்தியட்சமானதாகும். தோற்றமுள்ளது தோற்றமில்லாதது ஆகிய எல்லாவற்றையுந் தன்னுள் அடக்கி விளங்குவது திருநாமம். இவ்வாறு திருநாமமானது ஆதி அந்தமற்றதாய், எல்லாவற்றுக்கும் ஆதியாய் எல்லாமேயாய் இலங்குகின்றது.

உபிரைப் பந்தத்திலிருந்து நீக்கும் சத்தியுடையது திருநாமம். ஆன்ம ஈடேற்றத்தின் அதி உன்னத நிலையை அது தரவல்லது. அது தெய்விக ஒளியைத் தரவல்லது. எல்லாவற்றையும் ஒருங்கே காணும்அதிஉன்னதமான காட்சியைத் திருநாமம் தரவல்லது. மனிதன் நினைத்தற்கரிதாயுள்ள கடவுளைக் காணும் காட்சியைத் திருநாமம் தரத்தக்கது.

திருநாமம் அளவிலாற்றலுடையது. எவ்விதமாயும் அடக்க முடியாதது எனப்படும் மனமானது திருநாமத்தின் தண்ணளி வாய்ந்த சக்தியால் அடக்கப்படுகின்றது. திருநாமத்தின் சத்தியால் மனமே தெய்வமாக்கப்படுகின்றது. திருநாமத்தைப் புகலிடமாய்க் கொண்டவர் பேரதிசயங்களைச் செய்யக்கூடியவராகின்றார். மரணமே அவரைக்கண்டு அஞ்சி நிற்கும். இயற்கையின் சத்திகள் எல்லாவற்றுக்கும் ஆணையிட்டு, மக்களின் மனத்தில் தெய்விக ஒளியுண்டாக்கும் பொருட்டு ஒருவர் அவற்றை ஏவக்கூடியவராகின்றார். திருநாமமானது எல்லையற்ற அன்பும் இன்பமுமாய் மனிதனை மாற்றக்கூடியதாயிருக்கின்றது.

திருநாமம் ஓதப்படுமிடத்தில் தூய்மை பரவி இன்பமும் சமாதானமும் உண்டாக்கப்படுகின்றன. திருநாமம் எல்லாமாயிருக்கின்றது. அதை ஓதுதல் தியானமாகின்றது. அதை ஓதுவதாலுண்டாகும் ஆனந்தமே சமாதியாகின்றது. அன்பு, இன்பம், ஒளி, வல்லமை ஆகிய எல்லாமாயிருக்கின்றது திருநாமம்.

எங்கும் இறைவனைத் தரிசித்து என்றும் நீங்காத அன்பும் இன்பமும் பெறுதற்கு வேறு எந்தச்சாதனையுமே வேண்டப்படாது, திருநாமம் ஓதுதல் ஒன்றே போதுமானதென்று இதை எழுதுபவர் தனது அனுபவத்திலிருந்து திடமாகக் கூறக்கூடியதாயிருக்கின்றது.

இறை தரிசனத்தைப் பெறுதற்குத் திருநாமத்திலும் பார்க்க இலகுவானதும் எல்லோராலும் மேற்கொள்ளக்கூடியதுமான வேறு சாதனை எதுவுமேயில்லை. திருநாமத்தை இடைவிடாது ஓதுபவர் சீவன்முத்தராகின்றார் என்பது பூரண உண்மையாகும்.

ஆகையினாலே, அன்பர்களே! நீங்கள் எந்த இனத்தவராயிருந்தாலென்ன, எந்தச் சாதியினராயிருந்தாலென்ன, எந்த நிறத்தவராயிருந்தாலென்ன, எந்தக் கொள்கையுடையவராயிருந்தாலென்ன, திருநாமம் ஓதுதலை மேற்கொண்டு அத்துடன் ஐக்கியப்படுங்கள். நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டு தெய்விக ஒளியையும் அன்பையும் இன்பத்தையும் அடைவீர்கள். திருநாமத்தை ஓதுவதால் மனிதனுடைய அகங்காரம் நீங்கி இறைவனுடைய அருளாணைக் குட்படுதல் சித்திக்கும். திருநாமத்தை ஓதுவதால் மனிதன் கடவுளை எங்கும் காண்கின்றான்; கடவுளேயாகின்றான். திருநாமம் உண்மையில் கடவுளேயாகும்.

(திருநாமச் சிறப்புப்பற்றி ஸ்ரீ. சுவாமி இராமதாசரவர்கள் "விஷன்" பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றின் சாரம்.)

மருதமரத்தடியில் விநாயகரை வழிபட்ட மகா வித்துவான்

(முற்றொடர் — 5

திருமஞ்சனக்கிணறு தோண்டுவித்தல்

தெல்லிப்பழை மயிலிட்டி தெற்கு வருத்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு நெடுங்காலமாகத் திருமஞ்சனக்கிணறு இல்லை.

இங்கே சுமார் ஐந்நூறு வருடங்களாகச் செழித்தோங்கி வளரும் மருதமரம் ஒன்றுண்டு இம்மரத்தினடியில் யானை முகம்மாத்திரம் தோன்றத்தானே உருவங்கொண்டு பக்தர்களுக்குக் காட்சி தருகிறார் விநாயகர். இந்த மருதமரத்திற்கு அண்மையிற் பல நிழல்தரு மரங்கள் வளர்ந்து நிற்கின்றன.

பழம்பெருமை வாய்ந்த இவ்வாலயத்தின் பின்புறமாக குளம் ஒன்றுண்டு.

திருமஞ்சனக்கிணறு இல்லாத குறையைப் போக்கப் பல பெரியார்கள் முயற்சியெடுத்தனர். இப்பகுதிகளிலே நீர் ஊற்றுக் காண்பது கடினம். நீர் ஊற்றுக் காணப்பட வேண்டுமாயின் இருபதுமுழம் வரையில் தோண்ட வேண்டும். திருமஞ்சனக்கிணறு தோண்டுகையில் பல கஷ்டங்கள் ஏற்பட்டதாக அறியப்படுகிறது. பத்துப்பதினைந்து முழம்வரையில் தோண்டியவுடன் மணலால் அக்கிணறு மூடப்பட்டுவிடுமென்றும், இதனாற் கிணறு தோண்டும் முயற்சி கைவிடப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது.

கணேசையர் அவர்கள் வருத்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு வடக்கே காணியொன்று விலைக்கு வாங்கி, அதிற் குடிசையொன்று அமைத்து வாழ்ந்தார். மனைவியான அன்னலட்சுமி அம்மையார் இறக்குந்தறுவயிற்றமது சீதனச் சொத்துக்களைக் கணவன் பெயரில் எழுத விரும்பினர். ஆனால் ஐயர் அவர்கள் இதனை ஏற்க விரும்பாது மனைவியின் உறவினர்களுக்கே எழுதச்சொன்னார். அவருக்கு மாயைப் பொருள்களின்மீது பற்று இல்லை.

ஊர்ப்பொதுமக்கள் திருமஞ்சனக்கிணறு தோண்டும் முயற்சியில் ஈடுபட்டுத் தோல்வி கண்டதனைக் கண்ட ஐயர் அவர்கள் தமது காணியிலே திருமஞ்சனக்கிணறு தோண்டு

ஸ்ரீ. இ. சுந்தராஜ சர்மா

விக்க எண்ணங்கொண்டார். மனைவியின் ஆபரணங்களைவிற்று அப்பணத்திலேதான் இக்கைங்கரியத்தை நிறைவேற்றக் கருதினர்.

இருபத்துமூன்று முழம் வரையிலும் கிணறு தோண்டப்பட்டது. நீர் ஊற்றுக் காணப்படும் அறிகுறி தென்படவில்லை. ஒருநாள் மாலைப்பொழுது, ஐயர் அவர்கள் கிணறு எந்த அளவிற்குத் தோண்டப்பட்டுள்ளது என்பதனைப் பார்வையிடுகிறார். நீர் ஊற்றுக் காண்பதற்கான அறிகுறியில்லை. மனம் வருந்துகின்றார்.

தம் இஷ்டதெய்வமான மருதடி விநாயகப் பெருமான்மீது, தாம் எடுத்துக் கொண்ட முயற்சி கைகூட வேண்டுமென்று இரங்கிச் செய்யுள் ஒன்று பாடினர்.

"ஆட்டாதே யெங் களரனார்
கோட்டாலே குத்தியிந்தக்
கூபமதவன — நாட்டிடுவாய்
மாமருதிலீசா மதமா முகத்
தோனே
காமுறு வேற் குள்ளங் கனிந்து"

இவ்வாறு, தாம்கொண்ட பக்தித்திறனில் நம்பிக்கையுடைய ஐயர் அவர்கள் இச் செய்யுள் செய்தபின் குடிசைக்குள் சென்றனர்.

—தொடரும்,

தேகவியோகம்

சைவப்பிரகாசயந்திரசாலையிற் கடமையாற்றும் திரு. ம. சிவராசா அவர்களின் தந்தையார் உடுவில் திரு. காசிப்பிள்ளை மருதப்பா அவர்கள் சிறிதுகாலம் நோய்வாய்ப்பட்டிருந்து தமது 74ம் வயதில் தமது இல்லத்தில் 12-11-60 சனிக்கிழமை மாலை இவ்வுலக வாழ்வை விட்டு மறைந்தார். மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் பல சுற்றமித்திரர் சமூகத்தில் அன்னாரின் ஈமக்கிரியைகள் சைவமுறைப்படி சிறப்பாகச் செய்யப்பெற்றன.

இறைவன் திருவருளால் அன்னார் ஆன்ம சாந்தியடைவாராக. ——

தேகவியோகம்

சைவப்பிரகாசயந்திரசாலையிற் கடமையாற்றும் திரு. மு. சண்முகலிங்கமவர்களின் பாட்டனார் மானிப்பாய் கிழக்கு திரு. வே. வீரசிங்கமவர்கள் சிறிது நோய்வாய்ப்பட்டிருந்து தமது 75-ம் வயதில் தமது இல்லத்தில் 14-11-60 திங்கட்கிழமை இவ்வுலக வாழ்வை நீத்தார். மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் பல சுற்றமித்திரர் சமூகத்தில் அன்னாரின் ஈமக்கிரியைகள் சைவமுறைப்படி சிறப்பாகச் செய்யப்பெற்றன.

இறைவன் திருவருளால் அன்னார் ஆன்ம சாந்தியடைவாராக. ——

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் நக்ஷத்திரம்?

[ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது] எங்கள்சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 27-11-60—3-12-60

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

கமத்தொழில் முயற்சிகள் நல்ல பலனைத்தரும். பணத்துறையில் ஒரு அளவுக்கு நல்ல வாரம். ஆனால் மனச்சமாதானமிருக்க மாட்டாது. சுகவீனங்களுக்கிடமுண்டு. வயிற்றுக் கோளாறுகளுக்கிடமுண்டு.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

நண்பர்கள் இனத்தவர்களுடன் சண்டைகளுக்கும் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு. உமக்கு மனச்சமாதான மிருக்க மாட்டாது, கண்நோய்களுக்கிடமுண்டு, புது முயற்சிகள் கவனமாய்க் கையாள வேண்டும்.

மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 4ம் பாதம்.

உம்முடைய கருமங்கள் பலவற்றில் இந்த வாரம் சிறிது கண்டனத்தை நீர் முன்னிடவேண்டி வரும். ஆனால் நீர் வெற்றிபெறுதல் நிச்சயம், பழைய நண்பர் அதிக உதவி செய்வார்கள். தனலாபங்கள் நிச்சயம்.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

உம்முடைய அலுவலகத்தில் இந்த வாரம் சில தொந்தரவுகளுண்டாகும், சுகவீனங்களுக்குப் இடமுண்டு. இரகசியப்பகைவர் பற்றி எச்சரிக்கையாயிருக்கவும், அவர்கள் உம்மை வெல்லமுடியாவிட்டாலும் உமக்கு அவர்கள் கோபம் மூட்டலாம். கண்நோய்களுக்கிடமுண்டு.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

குடும்பக்கருமங்கள் இந்த வாரம் குழப்பமாயிருக்கும். மனச்சமாதானமிருக்கமாட்டாது. ஞாயிறு, திங்கள், செவ்வாய் கவனமாய்க் கழிக்க வேண்டும். உத்தியோக கருமங்களுக்கு வாரமிகுதி நல்லாயிருக்கும்.

கன்னிராசி உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

மூன் அரை வாரம் வியாபார முயற்சிகளுக்கு நல்லாயிருக்கும். தனலாபங்களும் நிச்சயம். ஆனால் செவ்வாய் பிற்பகல் புதன் வியாழம் கவனமாய்க்கழிக்கவும், வாரமிகுதி திரும்பவும் நன்றாகும்.

துலாம், சித்திரை 3 4ம் பதாம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

உம்முடைய சொந்தக்கருமங்களில் இந்த வாரம் சில திருத்தங்கள் நிச்சயம். தனலாபங்களும் நிச்சயம். ஆனால் வார இறுதியில் நண்பர்களுடன் அல்லது இனத்தவர்களுடன் சில சண்டைகளுக்கிடமுண்டு, கடைசி இருநாட்களையும் கவனமாய்க்கழிக்கவும்:

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

வீட்டிலோ கந்தோரிலோ இந்த வாரம் சமாதானமிருக்க மாட்டாது. சுகவீனங்களுக்கும் இடமுண்டு. ஆனால் பணத்துறையில் நல்ல வாரம். இடைஞ்சல்களிலிருந்து நீங்க நண்பர்கள் உதவுவார்கள்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

புது வியாபாரக் கருமங்களுக்கு நல்ல வாரம். தனலாபங்களும் நிச்சயம். ஆனால் குடும்பக்கருமங்கள் குழப்பமாயிருக்கும். தேகசுகமும் அதிகம் திருத்தியாயிருக்க மாட்டாது.

மகராராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

பகைவர் அழிவுக்கிடமுண்டு இந்த வாரம் உமக்குண்டாக்கப்படும் இடையூறுகளுட் பலவற்றை நீர் நீக்கக்கூடியதாயிருக்கும். வார இறுதியிற் சிறு சுகவீனங்களுக்கிடமுண்டு.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

குடும்ப சிலைமைகள் தொடர்ந்து திருத்தியீனமாயிருக்கும். ஆனால் பணத்துறையில் நல்ல வாரம். பழைய முதலீடுகள் நல்ல பலனைத்தரும். சுகவீனங்களுக்கிடமுண்டு, பித்தக்கோளாறுகளுக்கிடமுண்டு.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

இனத்தவர்களுடன் இந்தவாரம் சண்டைகளுக்கிடமுண்டு. ஆனால் அவர்கள் உமக்குத் தீமை செய்ய முடியாது. உத்தியோகத்துறையில் நல்ல வாரம். வேலை கூடுதலாயிருந்தபோதும் போதியளவுக்கு நீர் பிரதிபலன் பெறுவீர்.

தலைமைஆசிரியரின்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

வர் சங்கச் சார்பில் நடந்த இந்த வைபவத்துக்குப் பல்வேறு துறைகளையும் சேர்ந்த பல பிரமுகர்கள் சமுகமளித்திருந்தனர். பழைய மாணவர் சங்கச் செயலாளரான திரு. என். இராசநாயகம் அழகிய வேலைப்பாடமைந்த கருங்காலி யானைகள் இரண்டு தாங்கியவெள்ளிப் பேழையில் வரவேற்புப் பத்திரத்தை வாசித்து வைத்து வழங்கினர். மற்றும் பலர் பல பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

விழாவுக்கு பழையமாணவர் சங்க உபதலைவர் திரு. கே. சதாசிவம் தலைமை வகித்து திரு. அம்பிகைபாகனின் குணதிசயங்களையும் திறமைகளையும் பாராட்டிப் பேசினர்.

கல்வித் துறையில் 25 வருட காலம் அருந்தொண்டாற்றிய ஒருவரைப்பற்றிப் பேசுவது பெரும் அதிட்டமான ஒரு காரியமாகும் திரு. அம்பிகைபாகன் இச்சிறப்புக்கு இலக்கானது பூர்வ புண்ணிய வசத்தால் அறிஞர்களின் சகவாசம் கிடைத்தமையாலேயாம் ஸ்ரீ இராமகிருஷ்ணர், விவேகானந்தர் முதலானோரின் அனுபவங்களைப் படித்தறியும் வாய்ப்புப் பெற்றவர் அவர்.

வைத்தீஸ்வர வித்தியாலயம் என்ற கலைக்கூடம் திரு. அம்பிகைபாகனின் திறமையால் இன்று அறிஞர்கள் பலரையும் கவர்ந்து கொண்டிருக்கிறது. இத்தனை சிறப்புகளுடன் 25 வருடகாலம் இக்கல்லூரியை அவர் வழி நடத்தியமைக்கு அடிப்படைக் காரணம் சக ஆசிரியர்களுடன் ஒருகுடும்பம்போல ஐக்கியப்பட்டு நடந்ததேயாகும் என்று அரசாங்க அதிபர் திரு ம. ஸ்ரீகாந்தா அவர்கள் பாராட்டினர்கள்.

திருவாளர்கள் ரி. ரி. ஜெயரத்தினம், என். மாணிக்க இடைக்காடர், முதலியார், திரு. சி. முத்துத்தம்பி, வித்துவான் திரு. பொன். முத்துக்குமாரன், திரு. சேகுத்தம்பி முதலியோரும், திரு. அம்பிகைபாகனவர்களின் சிறப்புக்களைப் பாராட்டிப் பேசினர்கள்.

இற்றில் திரு. அம்பிகைபாகனவர்கள் தமது நன்றியைத் தெரிவித்தார்கள்.

—

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 209 ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 25-11-1960 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம: சிவப்பிரகாசம்

பெண்கள்கடமைஎது

—:—

வட கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தாரினதும் இந்துசமய ஆலோசனைச் சபையாரினதும் ஆதரவில் சென்ற ஞாயிற்றுக்கிழமை (20-11-60) காலை கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீமத். அருணாசலேசுவரர் கோவில் மண்டபத்தில் பிரபல இந்து சமயப் பிரசாரகர் சென்னை பிரம்ம ஸ்ரீ. எஸ். ஆர். துரைசாமி சாஸ்திரியார் M. A. அவர்கள் "பெண்கள் கடமை" என்னும் பொருள்பற்றிப் பேருரை நிகழ்த்தினர்கள்.

வாழ்க்கைத் துணைவியாக இருந்து, வீட்டுவிவகார அமைச்சராகவும், நிதி அமைச்சராகவும் கடமை பாற்றி உணவைப் பாகஞ் செய்து அளித்துத் தரம் பெற்ற பிள்ளைகளை வளர்த்தல் பெண்ணின் முக்கிய கடமை என்று சாஸ்திரி அவர்கள் தமது பேருரை பிற்குறிப்பிட்டார்கள். திரு. வை. முத்துக்குமார சுவாமி B.A. அவர்கள் வரவேற்புரை கூறினர்; வைத்திய கலாநிதி திரு. த. நல்லநாதன் அவர்கள் தலைமைவகித்தார்கள். வ.கொ.இ.ப. சங்க உபகாரியதரிசி திரு. எஸ். பாலசிங்கம் நன்றியுரை கூறினர்.

—

சங்கானை

அரசடி வயிரவர் கோவில்

தேர்த்திருப்பணி

விஞ்ஞாபனம்

சிவநேயச் செல்வர்காள்!

சங்காவை அரசடியில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் வயிரவப்பெருமானுக்குத் தேர்த் திருப்பணி ஆரம்பமாகி நடைபெறுகின்றது. இத் திருப்பணியைப் பூர்த்தி செய்யத் திரவியம் வேண்டி இருப்பதால் சிவநேயச் செல்வர்காவை உதவி செய்யும் வண்ணம் வேண்டுகின்றோம். பணம் பெறுபவரிடம் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கோள்ளுங்கள்.

பணம் அனுப்புபவர்கள் கீழ் காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

இங்ஙனம்,

பொ. அப்பாத்துரையர்.

அரசடி வயிரவர்கோவில்,

சங்கானை,

F 191 19-9-60.

தமதடியார்பொருட்டு

5-ம் பக்கத் தொடர்ச்சி

கிழக்குப்புறமாய்த் திரும்பியிருக்கிறது. பெரிய சிவபக்தருக்கு அபராதம் செய்துவிட்டோமே என்று எல்லோரும் வருந்தி ஸ்ரீ நாம்தேவ் சுவாமிகள்முன் சென்று அடியற்ற மரம்போல் வீழ்ந்து வணங்கிக் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். ஆகவே ஸ்ரீ நாம்தேவ் சுவாமிகளுக்காகத் தெற்கு நோக்கித் திரும்பிய தேவதேவன் இக்காலத்தும் தெற்கு நோக்கியே இருந்துகொண்டு நம்முடைய தென்னாட்டைக் கடாக்ஷித்து ரட்சிக்கின்றனர். தென்னாட்டில் திருப்புன்கூரில் பக்தன் திருநாளைப் போவார் எனப்படும் நந்தனார் தம்மைத் தரிசனம் செய்வதற்காகத் தம் வாகனமாகிய திருநந்திதேவரை விலகச் செய்ததுபோல் வட இந்திய நாட்டிலுள்ள இத்தலத்திலும் தன் பக்தன் ஸ்ரீ நாமதேவ் சுவாமிகளுக்காக இறைவன் தாமே திரும்பியுள்ளார் ஆகவே இறைவன் தன் அடியார்களிடத்துக்கொண்ட கருணைப் பிரவாகத்தை இது உலகுக்கு நன்கு எடுத்துக்காட்டுவதாகும்.

இந்தச்சிவலிங்கப்பெருமான் இருக்கின்ற இடம் ஆதிகாலத்தில் நீரினுள் ஆழ்ந்து மறைந்திருந்தது. இங்கு சுவாமி தரிசனம் செய்வதன் பொருட்டு வந்த பாண்டவர்கள் சிவலிங்கப் பெருமானைக் காணாது அருகிலிருந்தோரை வினவினர்; இங்கு சிவலிங்கப் பெருமான் நீரினுள்மறைந்தே இருக்கின்றார் என்று அருகிலிருந்தவர்கள் கூறினர். உடனே பீமன் தன் கதையால் நீரை அப்புறப்படுத்தவும் பாண்டவர்கள் ஈஸ்வரனைத் தரிசித்துச் சென்றனர் அந்நாள் முதற்கொண்டு இங்கு சிவலிங்கப்பெருமான் வெளிப்படையாகத் தரிசனத்திற்கு எளிதாக இருந்து வருகின்றார்.

இத்தலம் சிவலிங்கப்பெருமான் இருக்கும் கர்ப்பக்கிரகம் மலையினுட் குடைந்த ஒரு குகைக்குள் இருக்கின்றது. அக்குகையின் மேல் மற்றோர் கர்ப்பக்கிரகம் அமைத்து அங்கும் ஓர் சிவலிங்கத்தையும் நந்தியெம்பெருமானையும் பிரதிஷ்டை செய்துள்ளனர் தாருகனாற் சிறைப்பட்ட சிவனடியார்கள் சிறைக்கூடத்திற் செய்த சிவபூசையால் வெளித்தோன்றியவராதலின் அவர்கள் சிறைவாசம் செய்த குகையிலேயே சிவலிங்கப் பெருமான் எழுந்தருளியுள்ளார் என்று ஒரு வரலாறும் கூறப்பட்டுள்ளது; பிற்காலத்தில் தங்கள் மதத்தைத்தவிர பிற மதங்களைப் பின்பற்றுவோருக்கும் அவர்கள் ஆலயங்களுக்கும் தீங்கிழைத்தனர் மதியர்கள்; அவர்களுக்கு அஞ்சி உண்மையான லிங்கத்தை உட்குகையிலும் போலி லிங்கத்தை மேற்பாகத்தில் கண்ணெதிரிலும் அமைத்து மகதியர்களை ஏமாற்றவே குகையின் மேலே மற்றோர் கர்ப்பக் கிரகம் அமைத்து லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது என்று மற்றோர் வரலாறும் கூறப்படுகின்றது.

முன்னொரு காலத்தில் கர்மங்களே பலனளிக்கும், கடவுள் வேறு இல்லை என்ற துணிவுடன் இருந்த தாருகாவன முனிவர்களின் எண்ணத்தை அகற்றி உண்மையை யுணர்த்த மோகினி வேடம் பூண்ட மாலும், பிக்ஷாடனர் ரூபம்கொண்ட சிவபெருமானும் தாருகாவனம் சென்ற வரலாறே புராண வரலாறு ஆகும்.

மற்றொரு புராணவரலாறு வருமாறு:-

முற்காலத்தில் தாருகன் என்ற அரக்க தம்பதிகள் இருந்தனர். தாருகை பார்வதியை நோக்கிக் கடுந்தவமியற்றி அவளருளால் அநேக வரங்களைப்பெற்றாள்; மேலும் நினைத்தபடி செல்லக்கூடிய 16யோசனை விஸ்தீரணமுள்ள நந்தவனத்தின் நடுவில் ஒரு வாசஸ்தானத்தைப் பெற்று அதில் கணவனுடன் வசித்தாள். அவ்விருவரும் வரம் பல பெறினும் குலத்திற்கு ஏற்ற குணங்களை விடாது அந்தணர்களை வதைப்பதையே தங்கள் நித்தியகர்மமாக நினைத்து நடத்தி வந்தனர். அநேக அடியார்களும் அந்தணர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர். அரக்கர்களின் உபத்திரவம் பொறுக்காத ஔர்வ முனிவரின் சாபத்தால் அசுரர் பலர் அழியக்கண்ட தாருகை எஞ்சியவர்களைத் தன் வாசஸ்தானத்தில் அழைத்துக்கொண்டு கடலின் நடுவே தனது இருப்பிடத்தை இருத்தினாள். ஒரு சமயம் சுப்ரியன் சிவபூசையால் சிவ பிரியனான், தாருகையினால் சிறையில் அடைக்கப்பட்டான். சிவப்பிரியனை சுப்ரியன் சிறைக்கூடத்துச் சென்றதும் அங்கிருந்த அந்தணர்களை அழைத்துத் தம்முடன் சேர்த்து சிவபூசை செய்யலாயினான், இதனை ஒற்றர்களால் அறிந்த தாருகன், அவர்கள் சிவபூசை செய்யவொட்டாது தடுத்தான். மார்க்கண்டேயருக்காகக் காலனைக் காலால் காய்ந்த கருணைக் கடலாம் அடல்விடையேறு அண்ணல் (சிவபெருமான்) வைசியன் பூசித்த சிவலிங்கத்தினின்றும் தோன்றி சிவபூசை செய்வோரைத் துன்புறுத்திய தாருகனைத் தன் நெற்றிக்கண்ணால் நீறாக்கித் தம் அடியவர்களைக் காத்தார். ஆனால் தாருகை உமாதேவியாரிடம் வரம்பெற்று அசுரவம்சம் அழியாமல் காத்துவருகிறாள்; ஈசனும் அவ்வசுரர்களால் அன்பர்களுக்குத் துன்பம் வராதவாறு தாருகாவனத்திலேயே இருந்துகாத்து அருள் புரிகின்றார். இவ்வருள்மூர்த்திக்குப் போகேசர் என்ற திருநாமம் சிவபுராணத்தில் காணப்படுகிறது. இதற்கு ஜில்லிகா, சரஸ்வதி சங்கத்திலுள்ள பூதேஸ்வர லிங்கம் உபலிங்கம்.

ஜோதிர்லிங்க ஸ்தலம் 12, இதற்கு முன்னர் 6 ஜோதிர்லிங்க ஸ்தல வரலாற்று மகிமைகள் "இந்துசாதன"த்தில் பிரசுரமாகி வந்துள்ளதை சைவப்பெருமக்கள் வாசித்திருக்கலாம். மேலும் 5 ஜோதிர்லிங்கஸ் தலங்களின் வரலாற்று மகிமைகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து பிரசுரமாகி வரும்.

(திரு. மா. பா. தினமணிசிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org